722

உ

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத சாா்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சால்புண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கலை–6 குருகுலம், மாம்பாக்கம்; செய, ஆனி. ௨௫ ௯—7—54 தளிர்—38

## அருள் துணை

"மனமெனுந் தோணி பற்றி மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகடல் ஓடும்போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூ ருடைய கோவே"

'அப்பர்'

விலங்குத் தன்மை மனிதனை விடுத்துத் தானே அகல்வதில்லை. அவ்விலங்குத் தன்மையி லிருந்து விலக அவனாலும் முடிவதில்லை. இதுவே அவனுடைய பாவ வினைகட்கெல்லாம் காரணமாக இருக்கின்றது. நாளுக்குநாள் பாவ வினைகள் பெருகப் பெருக மனிதன் இறந்து பட்டவனாகின்றான்; மீண்டும் பிறக்கின்றான்; பழைய வினைகளை அனுபவிக்கிறான். மனிதன் குறையுடையவன். பழைய வினைகளை அனுபவிக்கும்போது எவ்வாறோ புதுப்பாவங்களையும் செய்து விடுகின்றான்; சாகின்றான்; பிறக்கிறான். இவ்வாறு வினைகள் தொடர்ந்து தொடர்ந்து வளர்ந்து பெருகுகின்றன. வினைகள் அறுந்தால் விடுதலை உண்டாகும் அவ்விடுதலைக்காக அவன் விரதமிருக்கிறான். தவங்கிடக்கிறான்; வாடுகிறான்; யோகஞ் செய்கிறான். அந்தோ! பழைய வினைகள் அறுவதில்லை.

மனிதன் தன் முயற்சியால் மட்டும் தனது பாவ வினைகளைச் சிதைத்துக் கரையேற இயல்வதில்லை. அவனது முயற்சிக்கு வேறு ஒரு பெருந்துணையுந் தேவை. அதுதானும் பாவமே இல்லாததாய், பாவத்துக்கு அப்பாற்பட்டதாய்; களைந்தெறிய வல்லதாய் இருத்தல் வேண்டும். அதைத்தான் ஆண்டவன் துணை என்று உலகம் சொல்லும்.

அத்துணை பெற, உயிர் தன் சிறுமை யுணர்ந்து ஆண்டவனை நினைந்து நினைந்து தனது குறைபாடுகளை உண்மையாக முறையிடுதல் வேண்டும். முறையீடு நேரியதாயின் அவனைக் காக்க ஆண்டவன் அருள் துணை வந்தே தீரும்.

ஆண்டவன் கன்னெஞ்சோ–வன்னெஞ்சோ உடையவன் அல்லன்; அவன் தண்டனை அறியாதவன்; அருளாளன்; மன்னிக்க விரைந்து நிற்பவன். உயிரின் வருத்தம் அறிந்து வாளா இருப்பனோ! அல்லது அவனது அருள்தான் வாளா இருக்குமோ! ஆண்டவன் உயிரின் மீது அருள்சுரக்கிறான்.

ஆண்டவன் அருள் இருபெருந்துணை செய்கிறது. அவ்வருள் மைந்தனது பழைய பாவங்களை மன்னிப்பதாகிறது. அவன் இனிப் பாவஞ்செய்யாதிருக்கும் வல்லமையையும் அவனுக்கு நல்குவதாகிறது.

"ஆரா அமுதே அருளே போற்றி"

'மூர்த்தி'

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

6-ம் ஆண்டுக் கையொப்பம்

(23-10-53 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |

ஆயுள்—

கையொப்பம் ரூ. 100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

மூகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | ஜய, ஆனி, | தளிர் |
|---|---|---|
| 6 | 9-7-54 வெள்ளி. | 38 |


## பண்புடையாளர் தொடர்பு

ஒரு நாட்டினர் தாம் முன்னேற்ற மடையவேண்டுமெனக் கருதினால் அயல்நாட்டினருடைய பகுத்தறிவின் இயக்கத்தையும், அதனால் விளையும் மாறுபாடுகளையும் கண்டறிவது மிக்க நலம் பயக்கும்! 'அடுத்ததின் தன்மை ஆன்மா' என்றபடி தொடர்புள்ள எவரெவரிடத்தில் எதை நாம் பார்க்கின்றோமே அவை நாம் அறியாமலேயே நம்மிடத்து மிக்க எளிதில் அமைவது இயற்கை. எனவே, ஒரு நாட்டினருடன் கூட்டுறவு கொள்ளும்போது ஒருவரை மற்றவர் கண்டு முன்னேற்றமடைவதற்கு இடமிருக்கிறது. மேனாட்டார் ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளுக்குள் அறிவிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்கக் காரணம் வியாபாரமும் அதன் காரணமாகப் பற்பல நாடுகட்குச் சென்று பிறருடன் கூட்டுறவு கொண்டதனாலுந்தான் என்பது ஒருதலை.

சைனா நாட்டவர் பிறநாட்டினருடன் மிகவாகக் கூட்டுறவு கொள்ளக்கூடாதென்னும் குறிக்கோளைப் பெற்றிருந்த காரணத்தால்தான் ஏறக்குறைய 2000 ஆண்டுகட்குமுன் எந்நிலையில் இருந்தார்களோ அதே நிலையில் ஒரு சில ஆண்டுகளுக்குமுன் இருந்தனர். ஆனால், கூட்டுறவின் பயனால் இன்றைய சீனா! எவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளது. எல்லா நலங்களிலும் உயர்ந்திருந்த நாமும் பல மாறுபாடுகளினால் முன்னோர்கள் மேற்கொண்ட நாடு, தலம் யாத்திரைகள் முதலியவைகளை விடுத்து நிலைதடுமாறிய காரணத்தால் நாம் எவ்வளவு இன்னல்களை அனுபவித்தோம் என்பது நன்கு தெரிகின்றதன்றோ! இருப்பினும், இறைவன் நம்மீது வைத்த தயாவினால்தான் பிறநாட்டுப் பெருந் தலைவர்கள் நம் நாட்டுக்கு வந்து நம் கூட்டுறவை விழைந்து பெற்று நலம் பெறுகின்றனர்.

பிறநாடுகளெல்லாம் நம்மைக் கண்டு மகிழ்ந்து புகழும்படியான நிலைக்கு முதற்காரணமாம் நம் முதலமைச்சர் நேரு அவர்களின் பேரன்பு அழைப்புக் கிணங்க, ஜினிவாவிலிருந்து சீனாவுக்குச் செல்லும் வழியில் சீன மக்களின் தலைவரும், முதலமைச்சருமான திரு. சூ. என். லாய் அவர்கள் புதுடில்லியில் தங்கி நம் நேரு அவர்களுடன் பல மணி நேரங்கள் உரையாடியிருக்கின்றார்கள் என்பது எல்லோர் உள்ளத்துக்கும் அமைதியையும், மகிழ்ச்சியையும் தரவல்லது. அதுபோழ்து நம் நேரு அவர்கள் சுதந்தரம் நம் பிறப்புரிமை. ஒவ்வொருநாடும் சுதந்தரமாக வாழவேண்டும், வாழவிடவேண்டும் என்றும், உலக அமைதிக்கு அதுவே சிறந்த வழி எனவுங் கூறினார். கேட்ட சீன முதலமைச்சர் ஆசியாவின் விளக்கம் இனிப் பிறர்கையிலில்லை' என்ற இனிமையான வீரமுழக்கம் செய்தார். கொரியாப் போர் நின்று அமைதி ஏற்படவிருந்த இந்தியாவின் தொண்டைப் பாராட்டி இதைப்போல் தற்போதைய இந்தோ-சீனாப் போர் நின்று அமைதி ஏற்பட்ட இந்தியா செய்து வரும் தொண்டினையும் மிகமிகப் புகழ்ந்தார்

இந்தியா சீனா இரு முதலமைச்சர்களின் சந்திப்பு உலக சரித்திரப் பொன்னேடுகளில் பொறிக்கப்படவேண்டுவதொன்று.

இந்தியா ஜனநாயக ஆட்சியுடையது. சீனாவோ பொது உடைமையை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நடைபெறும் நாடு.

எது எப்படியிருப்பினும் மக்கள் ஆற்றல் (ஜன சக்தி) சம்பந்தப்பட்ட வரையில் இந்தியாவும் சீனாவும் உலக நாடுகட்குள் முதலிடம் பெற்றிருக்கின்றன

உலக மக்கள் தொகையில் ஏறக்குறைய பாதியளவு இந்த இரு நாடுகளிலும் இருக்கின்றது. இவ்விரு நாடுகளையும் பின்பற்றி இந்தோனேஷியா, பர்மா முதலிய நாடுகள் முன்னேற்றமடையும் என்பதில் ஐயமில்லை.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# இலக்கிய உலகில்.....நாம்!

'மூர்த்தி'

(முன் தொடர்ச்சி)

எனினும், தன் வாழ்வு ஒன்றையே கருதி மக்களிடம் மேன்மை பெறும் பொருட்டு அவர்களை மயக்கும் ஒருவெறும் போதைப் பொருளாகவும் அது மாற முடியாது. கள்ளுக்கும் கவிதைக்கும் வேறுபாடு இல்லையா? இலக்கியம் வாழ வேண்டும்; தன் வாழ்வுக்கு ஜீவநாடியான பொது மக்களை வாழ்விக்கவும் வேண்டும்; தான் வளமையோடு திகழ வேண்டும்; தன்னைப் பயிலும் மக்கள் மனத்தையும் வளமுறச் செய்ய வேண்டும்; செம்மை என்னும் 'இருசி'யைத் தாங்கித் தான் தங்கு தடையின்றிச் சுழல வேண்டும்! அதே சமயத்தில் தன்னைச் சுவைக்கும் மக்களுக்கு 'சுகதுக்கம் சுழல் சக்கரம்' என்பது போன்ற சீரிய நெறிகளைச் சுட்டிக் காட்ட வேண்டும்; வளமை—செம்மை—அழகு—அறம்—கலையின்பம்—வாழ்க்கை நெறி ஆகிய வடதுருவ தென் துருவம் போன்ற இவ்விரட்டைப் பண்புகளை இலக்கியம் தன் மாட்டுக் கொண்டு திகழவேண்டும். சுவையினை நல்கிய இசைப்பாடல்களோ, அறத்தினை வகுத்த நீதி நூல்களோ, இவ்விரு பண்புகளை ஒரு சேர உடையனவாய் இல்லை. எனவே, இரு பண்புகளும் ஒருங்கே அமையக் கூடிய இலக்கியத்தை வகுப்பது தண்டமிழ்ச் சான்றோரின் கடனாகி விட்டது. வடமொழிக் காவியங்களை அன்னாளில் கற்ற தமிழர் அவற்றை ஒட்டிக் கதை மூலம் வாழ்க்கை நெறியையும் எடுத்துக் காட்டிக் கவிதையமைப்பின் மூலம் ரசனையை வளர்க்கும் முறையைத் தமிழிலும் கண்டிருக்க வேண்டும். இத்தகைய எண்ணத்தின் சாயையாகத்தான் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான தமிழ் மொழிக் காவியங்கள் திகழ்கின்றன; ஊற்றெனப் பொங்கி வரும் உள்ள உணர்ச்சியையும், உலகில் நிறுவ வேண்டிய உயர் நோக்கங்களையும், உலகோர் காண விழையும் பல கருத்துக்களையும் ஒரே வண்ணத்தில் தன் பாடலுள் பொதித்து வைக்க வேண்டும் என்று எந்தக் கவிஞனாவது எண்ணுவானேயானால், அவன் கவிதை யாவரும் வியக்கத் தக்கதொரு கதையைக் கொழு கொம்பாகக் கொண்டு அதன் மீது சந்த நயத்தோடு படர்ந்துள்ள ஒருகாவியக் கொடியாகவே இருக்க முடியும். இக்கருத்து கிரேக்க நாட்டுப் பெரியாரான 'அரிஸ்டாட்டல் என்பவரால் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. எனவே, கதையாகிய கடைக்காலின் மேல் இலக்கியமாகிய கலைக் கோயிலை நிறுவும் முறை தமிழ் நாட்டில் காணப்பட்டமை முறைமையானதே. அந்த முறை தமிழ்நாட்டில்முன் காணப்பட்டதே. அந்த முறை யாவராலும் பேணப்பட்டமையும் சாலச் சிறந்ததே. ஆகவே, தொன்று தொட்டு பேணப்பட்டு வரும் கதை ரூபத்தில் மக்களை மகிழ்விக்கும் நவீனம் சமூகத்தில் செல்வாக்கு பெற்றுள்ளதும் பொருத்தமுடையதே.

மேலும், கவிதை, நாடகம் காப்பியம் முதலியன போன்ற ஆக்க இலக்கியங்களானால், கற்கும் மனிதனும் தனது புலமை வளத்தில் கவினுற்ற இலக்கிய ஆசிரியனை ரசிக்கக் கூடிய நிலையைத் தேடிக்கொள்ள வேண்டும். நவீனமோ எனில் அங்ஙனமன்று. யாப்பு முதலான சட்டதிட்டங்கட்கு கட்டுப்படாது, திரி சொற்களால் திணிக்கப்படாது, பரந்த விரிந்த மனித வாழ்க்கையை எளிய போக்கில் சித்தரித்துச் செல்லும் நவீனம் யாவரும் விரும்பக் கூடிய நிலையில் உள்ளது. எனவே, இது மிகுந்த செல்வாக்கும் பெற்றுள்ளது.

சிலர், கதை கேட்பது குழந்தை உள்ளத்தின் போக்கு என்றும், முதல் பக்கத்தின் மூலமே பொருளை அறிந்து கடைசி பக்கத்தைக் கூறக் கூடிய வன்மை படைத்தவர் கதையை ரசிக்க முடியாது என்றும், கதைகள் என்பன நடக்கக் கூடாதன வாதலின், வாழ்க்கையைத் தீட்டும் நாவலாசிரியன் கதையினைக் காட்டல் ஏலாதெனவும் கூறுவர். இக்கூற்றினைச் சற்றே நினைந்துப் பார்த்தல் வேண்டும். வாழ்க்கை என்பது ஒரு நெறிக்குக் கட்டுப்பட்டதாய் எங்கோ கட்புலனாகா இடத்தில் தொடங்கி தன் போக்கில் உருண்டு எங்கோ சென்று நிற்கும் சகடம்தான். இந்த வாழ்க்கையையே தான் நாவலாசிரியனும் தீட்ட முற்படுகின்றான். ஆயின், நினைக்கத் தக்கது ஒன்று; அதாவது கோவையற்ற குழப்பம் நாவலாசிரியன் வேண்டுவதன்று. கலை என்பது ஒருமைப் பாட்டிற்குக் (Harmony) கட்டுப்பட வேண்டும்; குறிக்கோள் நிலையிலிருந்து முகிழ்க்க வேண்டும். கலைஞன் தீட்டுவது மனித வாழ்க்கையையேதான்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# இனிய பொழுது

—3—

நா. சுப்பிரமணியன்.

நேற்றும் இன்றும் ஓய்வு நாள். சனி, ஞாயிறு காலங்களில் பல வேலைகளைச் செய்து விடவேண்டும் என்றுதான் நினைக்கும் மனம். ஆனால், செயலில் இறங்குவதென்னவோ இல்லைதான். கிழமை முடிவிலுந் தொடக்கத்திலும் மனம் என்னவோ மாதிரியான ஏக்கத்திலும் தயக்கத்திலும் ஆழ்வது இயல்பே. எனவே, இன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் எதுமின்றிச் செயலற்றிருந்த நான் சற்று முன்னதாகவே இரவு உணவு கொண்டு அண்ணனார், அன்னையாருடன் அமர்ந்தேன். இருவரின் வாயிலாக ஏதேனும் அறிய முடியுமோ என்றெண்ணியது என் மனம். அதுபோழ்து என தன்னையார் தனக்கே யுரிய இனிய மெல்லிய குரலில் உயிர்கள் நல்வாழ்வாம் ஒன்றினையே தனது குறிக்கோளாகக் கொண்ட அப்பமூர்த்திகள் அருளிய,

"உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியினுருவெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப்படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறு தானே றேறி
யமரர்நா டாளாதே யாரூராண்ட
அயிரா வணமேயென் னம்மானேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே"

என்னுந் திருவாரூர்த் திருத்தாண்டகத்தினைத் தன்னை மறக்கச் செய்யும் நிலையில் பாடினர். எங்களோடு எதிர்பாராமற் கலந்துகொண்ட எதிராசனார் அசைவற்றிருந்து "ஆமாம் ஐயா இப் பாட்டினை இசையோடு அம்மா அவர்கள் பாடக்கேட்கேட்டது இனிமையாக இருக்கின்றது. ஆனால்......என்றிழுத்தார். உடனே நான் "தயங்காமற் கூறுங்கள்" என்றேன். அவரும் சிறிதும் தடுமாற்றமின்றி இப் பாட்டும் நானும், உடைக்காத முழுத் தேங்காயும் நாயுமாக வன்றோ இருக்கின்றோம் என்றார். நான் என் அண்ணனாரை நோக்கினேன் நோக்கின் தன்மையை அறிந்துகொண்ட என் அண்ணனார், ஐயா! உயிர்கள் ஆசை மீதூர அலைந்தலைந்து பெருமூச்சு விட்டு ஓடி உழைத்துத் தளர்வது எல்லார்க்குந் தெரிந்ததே இது எவ்வளவு துன்பத்தைத் தரத்தக்கதாக இருக்கின்றது? துன்பமின்றி இன்பந்தரத் தக்கதாயுள்ள ஒரு பொருளின் உருவத்தினை அது தானும் உள்ளேயிருந்து உன்னுந்தோறும் ஒளிமிகுந்து உண்மாசுகளைக் கழுவி நல்வாழ்வுக்கு அடிகோலி மனத்தகத்தெழுதி விடின் மிக்க இன்பந் தரும். ஈறிலா இன்பம் நல்கும் ஒன்று இறைவனேயாகும். இக் கருத்தை.

"சுரிகுழன் மடவா ரிளமுலைப் பணைப்புந்
துகிலிறை சோர்வது நகையும்
வரிவிழித் தொழிலுஞ் சேயிதழ்த் துடிப்பு
மனத்திடை யெழுதிலைத் தழிவேன்
தெரிதமிழ்க் கயிலைச் சிவபிரான் வடிவுஞ்
செய்கையுந் தன்னடி யார்க்குப்
பரிவுகூ ரருளு மனத்தகத் தெழுதாப்
பாவியேற் கினிப்புக லென்னே"

எனச் சிவஞான சுவாமிகள் அருளியிருக்கின்றார்கள். இறைவனுடைய திருவுருவத்தை மனத்திடை எழுதிக் கொள்ளுதல் மிகமிக நல்லது; இன்றியமையாதது. இறைவன் ஓருருவமும் இல்லாதவன். அவனது திருவுருவம் எங்ஙனம் கூடும் எனின், அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவரவர் நினைத்த வடிவுடன் நிற்பது இறைவனது இயல்பு. "ஆரொருவ ருள்குவா ருள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற வருளுந் தோன்றும்" என்று குறிக்கப்படும் நிலை அறிய வேண்டுவதொன்று. அவ்வுருவத்தினையே ஒவ்வொருயிரும் தூய இடத்தமர்ந்து உற்று நோக்குதல் வேண்டும் அவ்வாறு நோக்குமிடத்துப் பெருமூச்சு விடுஞ் செயல் இருப்பதானால் மனம் ஒருமுகப் படுதலின்றிச் சலிப்புற்று நிற்கும் அதனை மாற்றுவான் வேண்டி மூச்சடக்குதல் நல்லது. மூச்சடக்குதலைப் பிராணாயாமம் என்பர் அறிந்தோர்; ஆயாமம் என்பது தடுத்தல். மூச்சினையடக்குதலே அதன் பொருள். மூச்சினையடக்கி இறைவனது திருவுருவத்தை உற்று நோக்கிப் பலகால் பயில்வதாயின் மனமாகிய படத்தின் (திரைச் சீலை) கண்ணே அவ்வுருவம் அமையும் சிறிது நினைத்த காலத்திலேயே சலனமின்றி முழுவுருவம் அமைகின்றவரை அப்பயிற்சியை விடலாகாது. அதுவரை மிகவாக வருந்தி வேண்டியிருக்கும் நாவுக்கரசரும் "வெம்மை நமன் தமர் மிக்கு விரவி இழுப்பதன் முன், இம்மை யுன்றா ளென்ற னெஞ்சத் தெழுதிவை" எனப் பெரிதும் வேண்டிக்கொண் டிரங்கியிருக்கிறார்கள். இறைவனது திருவுருவத்தின்கண் நிலைத்த அன்போடு நிற்கும் ஒருவன் தனது ஆவியையும், உடலையும், உடைமைப் பொருளையும் இறைவனதாகவே கொள்ளும் மனப்பான்மையுடையவனாவான். அந்நிலையையே 'உயர் ஆவணஞ் செய்திட்டு" என்றார்;

இங்கு ஆவணம் என்பது உரிமைப் பத்திரம் (இப் பத்திரம் உள்ளம் என்னுந் தாளில் அன்பு என்னும் மை கொண்டு ஆர்வம் என்னும் எழுதுகோலால் எழுதித் திருவருள் என்னும் ஆவணக்களரி (Registrar's office) யில் பதிவு செய்யப் பெற்றது மேலு) இது மானசிகமாகச் செய்யப் படுவது. இக் கருத்தினையே பிறிதோரிடத்தில் பிறதுறையினின்றேற அருளு பெருஞ் சூலையினால் ஆட்கொள்ளப்பட்ட அப்பர் சுவாமிகள் "ஆவணத்தா லென்றன்னை ஆட்கொண்டான் காண்" என்று கூறுகின்றனர் திருஞான சம்பந்தர் "ஆவணங் கொண்டெமை ஆள்வாரிலும், கோவணங் கொள்கையர் கொள்ளிக் காடரே" எனவும் பாடியது இம் முறை பற்றியேயாம். "ஒப்பாக வொப்புவித்த வுள்ளத்தா ருள்ளிருக்கும், அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காணம் மானாய்" என்று வான் கலந்த மாணிக்கவாசகப் பெருமானும் விளக்கியிருக்கின்றனர் உயிர்கட்குந் தனக்கும் இருக்குந் தொடர்பினை எத்துணை வலியுறுத்துவான் வேண்டித் திருவருள் பதிவகத்தில் தனக்கு முழு உரிமையும் அனுபவிக்கும் உரிமை மட்டும் உயிர்கட்கும் ஈந்தும் அதனை உரிமைப் பதிவு செய்து கொள்ளும் இறைவனின் திருவருட் பயனுக்கு நாம் எவ்வளவு கடமைப் பட்டிருக்கின்றோம் என்பதை எண்ணி எண்ணி நன்றி செலுத்த வேண்டுமல்லவா? உடல், பொருள், ஆவி முதலியவற்றை இறைவன் வசமாக்குதலை 'உன் கைத் தந்தால்" என்றார். அவ்வாறு ஒப்புவித்த கடனால் இறைவன் தான் உணர்த்த உணருகின்ற உயிர்களோடு கலந்து நின்று வாழுந் தன்மையுடையவன் என்பார் "உணரப்படுவாரோ டொட்டி வாழ்தி" என்றார் இங்கு ஒட்டி என்பது ஒன்றி என்பது பொருள்படும். இவ் வொன்றியிருக்கும் செயல் உயிர்கள் இறைவனைப் பற்றி நிற்கும் இயல்பினால் நிகழ்வது. சிவனடியார்கள் 'ஒட்டிட்ட பண்பினுருத்திர பல்கணத்தார்' எனப் போற்றப்பட்டுள்ளனர். 'ஒட்டியாட்கொண்டுபோய் ஒளித்திட்ட உச்சிப் போதனை' எனச் சுந்தரர் அருளியதையும், நினைவு கூறல் வேண்டும். பற்றி நிற்கும் பத்தருள்ளத்தே பரமன் வீற்றிருந்தருளுவான் எனத் 'தொழுதகங் குழைய மேவித் தோட்டிமையுடைய தொண்டர், அழுதகம் புகுந்து நின்றார் அவரவர் போலுமாரூர்' என்றருளினர் தோட்டிமை என்பது ஒற்றுமை. இவ் வொற்றுமை பல திறத்தனவென சிவஞான முனிவர் (சிவஞான போதம் பத்தாஞ் சூத்திர முதலதிகாணத்தில்) கூறியவை யாவும் சிந்திக்க வேண்டுவனவாம். கடவுள் தன்னோடு கலந்து நிற்கும் அன்பர்கள் உளத்தே வாழும் இயல்பினன். எனவே, சிவத்தையடையும் நெறி இத் திருத்தாண்டகத்தே செம்மையாக உயிர்களுணர்ந்து உய்யும்படிக்கற்பிக்கப் பட்டிருக்கிறது. தம் கடன் உயிர்கள் நம்மைத் தாங்குதல் என நின்ற இறைவனிடத்து நம் கடன் பணிசெய்து கிடப்பதே என்றொழுகி உய்தலே நல்லது எனக் கூறி வளர இருந்தனர். இது காறுங் கேட்டு வந்த எதிராசனார் ஐயா! இவ்வளவு ஆழ்ந்த, ஒப்புக் கொள்ளக் கூடிய கருத்துக்கள் தேவாரத்திலிருக்கின்றனவா? வைணவ நூல்கள், பேச்சுக்கள் வேண்டிய மட்டும் பார்த்தும், கேட்டும் இருக்கின்றேன். இனிய பொழுது இங்கு இயங்குகின்றது என அறிந்தேன் இனித் தவறாமல் வருவேன். என்று உளங்கனிந்து கூறினர்.

ஒல்லையாறி யுள்ள மொன்றிக்
கள்ள மொழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து
காமவினை யகற்றி
நல்லவாறே யுன்றனாமம்
நாவில் நவின்றேத்த
வல்லவாறே வந்துநல்காய்
வலிவல மேயவனே.

என்ற சம்பந்தர் பாட்டினைக் கசிந்துருகிப் பாடி உள்ளக்கிழியில் உருவெழுதத் தூண்டிய வாய்ப்பினை வாயார உளமார வாழ்த்தினேன்.

Phone 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்
ELEPHANT KISAN
பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 [illegible] தெரு, சென்னை 1.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் வாழ்க்கை என்பது தனி மனிதன் சுற்றுப் புறத்துடன் நடத்தும் போராட்டந் தானே? இப் போராட்டத்தில் தான் அறிவு, ஆண்மை, ஆர்வம், அன்புடைமை ஆணவம், ஆர்வமின்மை முதலான அவனது பல திறப்பட்ட இயல்புகளும் வெளியாகின்றன. இந்த வாழ்க்கைப் பிரயாணத்தில் மனிதன் வெற்றிக் கரையினை அடைந்தாலும் அடையலாம்; அல்லது அவல அலையுள் அமிழ்ந்தாலும் அமிழலாம். எதுவானாலும், அந்த வாழ்க்கை கலையற்ற இடம் பெற, தனக்கென வகுக்கப்பட்ட ஒரு முறையினை அடைதற்கேயாம்; வாழ்க்கை என்பது கலையில் கதையாக மாறுகின்றது. தனக்கென வகுக்கப்பட்ட ஒரு நிறைந்த அமைப்பினையும் (Plot) ஒவ்வொரு நவீனத்திலும் பெறுகின்றது.

முன் கூறிய அமைப்பு கலைஞன் புற உலகினின்று திணிக்கப்படக்கூடாது. ஆயின் கதா பாத்திரங்களின் கட்டுக் கோப்பின் மூலம் தானாகவே அமைய வேண்டும். கதா பாத்திரங்களின் எழுச்சியே நவீனத்தின் எழுச்சி. வாழ்க்கைச் சித்திரமாக நவீனம் உயர்வது பாத்திரங்களின் எழுச்சி வெளிப்படும் வகையில, தகுந்த வாழ்க்கைப் பிரிவை எழுத்தாளன் தெரிந்தெடுப்பதில் தான் அமைந்துள்ளது. படிப்போரின் பகுத்துணர்ச்சியை வளர்த்து இரக்கம் எழுப்புவதாயும் அது அமையவேண்டும். ஆயின், இரக்கம் எழுப்பவேண்டும் என்பதற்காகச் சில தமிழ் நவீனங்கள் வெளிவருகின்றன. 'அடக்கம் அமருள் உய்க்கும்' என வரம்பு கட்டி, எந்தத் தன்னடக்கத்தை வள்ளுவர் பெருமான் பாராட்டிப் பேணியுள்ளாரோ. அத் தன்னடக்கம் இன்மையின் காரணமாக ஒரு குறிப்பிட்ட மனிதனின் வேட்கை அளவு கடந்து சென்று, அதன் பயனாக அவன் தன் சுற்றுப்புறத்துள்ளோரால் எள்ளி நகையாடப் பெறும் நிலையினை அடைவான். இத்தகைய ஒரு கொள்கையின் மீதே எழுப்பப் பெற்ற நவீனங்கள் எத்தனையோ? இத்தகைய நாவல்களில் சுட்டப்படுவது வேட்கை வீழ்ச்சியே (Tragedy of the appetites) யல்லாது ஆசம வீழ்ச்சி (Tragedy of the soul) யன்று. இதனால் படிப்போரின் மனத்திலும் இரக்கம் எழும்பி, வழிந்தோடுவதற்குப் பதிலாக, அருவருப்பே தோன்றி மறைகின்றது. அவலம் என்னும் பெயரால் இத்தகைய பொருத்தமற்ற கொள்கை மூண்ட நவீனங்கள உதயமாதல் குறைய வேண்டும். அவலத்தின் எல்லையாகவும் அச்சத்தின் அரணாகவும் உள்ள சகப்பிரியாது நாடகங்கள், படித்தவுடன் இரக்கத்தை உண்டாக்கிப் பின்னர் வாழ்க்கைப் புயலின் கொந்தளிப்பினைப் பற்றி அறிவுறுத்தி ஓரளவு அச்சத்தையும் தனது அவல நிலையின் மூலமாகக் கற்போர் உள்ளத்தில் நிலைநிறுத்துதல் கண்கூடு. இத்தகைய சிறப்பியல்பைத்தான் அவலம் என்பதன் இலக்கணமாக அரிஸ்டாடல் கூறுகின்றார். அவல நாடகம் என்பது மனித உள்ளத்தின் வேட்கை நிலைகளை இரக்கம், அச்சம் ஆகிய இரண்டின் மூலம் தூய்மை செய்கிறது. (Purifies the passions by pity and fear) என்று அவர் கூறுகிறார். 'அவலம்' என்னும் மெய்ப்பாட்டுக்குரியவாகிய எந்த நவீனமும் இந்த நிலையைப் பெற்றிருத்தல் வேண்டும். சமுதாய நிலையை அடிப்படையாகக் கொண்டு எந்த நவீனமும் எழுந்தாலும், அவலமாக அது அமையுமானால், சிந்தனைக் கதிர்களைப் படிப்போரின் உள்ளத்தில் பாப்பி, வாழ்க்கையைச் செம்மைப் படுத்தும் என்பது ஒருதலை.

இச் செயல் நன்கு நிறைவேற நவீனம், முற்கூறியபடி, சரியான எழுச்சி புடையதாய் அமைய வேண்டும் வாழ்க்கை நிலையினைச் சரியானபடித் தீட்டிக் காட்டுவதில் தற்போது தலைசிறந்துள்ளவை வங்க நவீனங்களேயாம். சரத்சந்திரர், பங்கிம்சந்திரர் முதலானவர்கள் நவீனத்தினைப்படிக்குங் காலத்து படிப்போர்களது கவனம் கதையில் மட்டும் செல்லாது ஊடுருவி நின்று கருத்திலும் லயிப்பது யாவரும் அறிந்த ஒன்றும். இத்தகைய நிலையில் தற்போது உயர்திரு டாக்டர் மு. வரதராசனார் உயர் திரு வி. ச. கண்டேகர் முதலியோர் முதலிடம் பெறுகின்றனர். பண்டைக்கால நாகரிகம் பொருளியல், இன்பியல், சமயம் முதலிய வாழ்க்கையின் பகுதிகளை விளக்கி அதனின்று தமிழர் எல்லா நலங்களும் பெற்றுச் சிறந்து வாழவேண்டும் என்னும் ஓரே கருத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ் உலகில் ஞாயிறெனத் திகழும் உயர்திரு இளவழகனார் அவர்களின் எழுத்தோவியங்களும் தமிழ் இலக்கியப் பூங்காவில் பண்பு மணத்தைப் பாரெல்லாம் பரப்பும் தகைமை வாய்ந்தவை. அவைகளைப்போல் ஒரு சில நூல்கள் தற்போது அரும்பியுள்ளன எனல் மிகையாகாது மொழி பெயர்ப்பு நூல்களைப் படித்து வங்கப் போக்கைத் தெள்ளிதின் உணர்ந்த தமிழ் எழுத்தாளர்கள் அதையொட்டித்தமிழிலும் புதுப்புது நூல்களை ஆக்க முற்படுதல் வேண்டும்.

பிற நாட்டுச் சாத்திரங்கள் நம் தமிழில் மொழி பெயர்த்தல் வேண்டும்' என்ற பாரதியாரின் வாக்கையாவது ஓரளவு செயலில் காட்ட இனி முன் வரவேண்டும்.

வீரப் பாடலுக்கு (Epic poetry) நாடோடிப் பாட்டு அமைவது போல, நவீனத்திற்குச் சிறுகதை அமைந்துள்ளது. அது தனக்கென ஓர் உலகினையுடையதாய், வாழ்க்கையை முழுமையுடன் சித்தரிக்காது, இரண்டொரு தினசரி சம்பவத்தினை அடிப்படையாகக் கொண்டு தோன்றுகிறது. இது பத்திரிகை உலகத்தில் பெருஞ் சிறப்புடன் உலவி வருகின்றது; விளங்குகிறது. உலகம் தோன்றிய நாள் முதலாக மனிதவர்க்கத்தின் பெரும் பகுதியினை ஆட்சி செய்து வரும் காதல், வீரம் ஆகிய இரண்டு பண்புகளுந்தான் பெரும்பாலும் இச் சிறுகதை எழுவதற்கு அடிப்படையாக விளங்குகின்றன. ஏறத்தாழ ஒரே விதமான போக்கில் புதுமையொளி வீசாது செல்வதைக் குறித்துச் சிறுகதைகளைப் பெரிதும் பலர் இகழ்வர். அவ்வாறெனில் புதுமைப் போக்கினால்தான் ஓர் இலக்கியம் மேன்மையுறுமா? என்பது ஐயப்படவேண்டிய தொன்றே. சங்க இலக்கியங்களை நினைவு கூறுங்காலத்து அகப்பாட்டுக்கள், புறப்பாட்டுக்கள் எனப் பெரிதும் பாராட்டப்படும் செஞ்சொற் கவிதைகள் யாவும் ஏறத்தாழ ஒரே பொருளினை அடிப்படையாகக்கொண்டு, ஒரே நடையில் செல்வனவாய் அமைந்துள்ளன. ஆனால், அன்று முதல் இன்றுவரை அவை ஒருமுகமாகப் பாராட்டப் படுகின்றனவே. காரணம் யாது? உன்னி ஊன்றி நோக்குவார்க்கு செஞ்சொற்களால், செம்மையான போக்கில் அமைந்த அப்பாடல்கள் அக்கால நாகரிக நன்நெறியினை விளக்குவனவாய் மட்டுமல்லாது பாடலின்கண் பொதிந்துள்ள மெய்ப்பாட்டினைப் படிப்பவர் மனத்தே எழுப்புந்தகைமை வாய்ந்தனவாய் உள்ளமையே என்பது தெள்ளிதின் விளங்கும்.

சமூக சீர்திருத்தம், அரசியல் எழுச்சி முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு எழும் சிறுகதைகளும் மெய்ப்பாட்டினை உண்டாக்கும் முறையில் தலைசிறந்து விளங்குதல் இன்றியமையாத தொன்றாம். இன்றைய இலக்கிய உலகுக்கு, சிறுகதை எழுத்தாளர்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கக் கூடியவர் டால்ஸ்டாய் ஆவார். தமிழ் எழுத்தாளர் சிலர் எழுதிய சிறுகதைகளைக் காணுங்கால், வெகு விரைவில் தமிழ் நாட்டிலும் பல டால்ஸ்டாய்கள் தோன்றுவார்கள் என்னும் எண்ணம் அரும்புகின்றது. பத்திரிகை உலகந்தான் சிறுகதை பண்பாடடையப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

இனி, மேனாட்டாருடன் ஒட்டிய முறையில் 'விமர்சனம்' என்னும் இலக்கியப் பகுதி வளர்ந்துள்ளது. அங்கங்கே நடத்தப்படும் இலக்கிய மாநாடுகள் இந்த விமர்சன முறையினை வளர்க்கும் தொண்டில் சிறந்து விளங்குகின்றன. வரலாறு, விஞ்ஞானம் முதலான அறிவிற்கலை நூல்களும் தமிழில் வெளியிடப் படல் வேண்டும் என்னும் ஆர்வம் தற்காலத்து மிகுந்துள்ளமை யாவரும் அறிந்ததே.

உரைநடை இலக்கியம் மலிந்துள்ள இக்காலத்தில் பாடலே தோன்றவில்லை எனல் கூடாது. தேசிய விநாயகம் பிள்ளை, பாரதிதாசன், யோகி சுத்தானந்த பாரதி, கவிஞர் சி. து. கன்னிசாமி, சு. சு. யோகி முதலியவர்களைப் போன்ற தமிழ்க் கவிஞர்களின் பாடல்களை தமிழ்நாடு மறந்துவிடுதல் இயலாத செயலாம். ஆனால், இப்பாடல்களில் திகைக்க வைக்கும் அமுதப் பொருண்மையினை விட, வாழ்க்கையோடு ஒட்டிய உண்மைகளை தீட்டப்படுவதோடு இடைக்கால உயர்வு நவிற்சி மங்கி, மணிப்பிரவாள நடை நலிந்து, சங்கச் சான்றோரது தன்மை நவிற்சியணி மலிந்து தனித் தமிழ் நடையில் பாடல்கள் செல்கின்றன என்பதே பொருந்தும். கவிதைப் பண்பினைப் பற்றிக் கவலையில்லாமல், தொடையழகில் மயங்கிப் பாடல் எழுதுங்கால் இயற்றுபவரும், படிக்குங்கால் ரசிகரும் இடரும் வண்ணம் இயற்றப்படும் 'சீரோட்டயமக அந்தாதி' முதலிய சொல்லடுக்கு வெற்றுச் செய்யுட்கள் இக்காலத்துச் சலுகையை யிழந்து விட்டன. 'பண்டிதர் தமிழ்' என்னும் முறையில் திரிசொற்களுக்கே இருப்பிடமாய்ப் பொது மக்கள் அருகே வர அச்சமடைந்த செயற்கைத் தமிழ் மறைந்துவிட்டது. ஜனநாயக உணர்ச்சி மலிந்துள்ள இந்தக் காலத்தில் இலக்கியம் பொது மக்கள் உடைமையாகக் கருதப்பட்டு, அவர்கள் படித்துப் பயனடைவதற் கேற்ப மொழி எளிய நடையினை அடைந்து வருகின்றது. எனினும், 'எளிய நடை, என்பதை விபரீதமாகப் பொருள் கொண்டு, மொழியின் பெருமிதத்தினைக் குறைத்தல் கூடாது. பொருத்தமற்ற சமய வெறி, இனவெறி முதலியனவும் பாடலில் இடம் பெறக்கூடாது. தமிழ் மொழிப் பற்று சுடர்விட்டு எரியும் 'மறுமலர்ச்சி' இலக்கிய நிலைக்குச் சங்ககாலச்

# பொன் மொழிகள்

பா. மாணிக்கவல்லி.

'மண், நீர், நெருப்பு, காற்று, வான் என்னும் ஐம் பெரு பொருள்களின் கலப்பாற் றேன்றிய இவ்வுலகங்களின் உள்ளும் புறம்புமாகிய எவ்விடங்களினும் இறைவன் எள்ளில் நெய்போற் கலந்து நிற்பானாயினும் மக்கள் தன்னை எளிதிற் கண்டு வழிபடுவதற் பொருட்டு அவன் அனற் பிழம்பின் கண்ணே முனைத்துத் தோன்றுவன்'

'வேளாளர் நாகரிகம்'

---

சமயப் பொறுமை அடிப்படையாக விளங்குதல் வேண்டும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற ஓசை இன்றை 'மறுமலர்ச்சி' இயக்கத்தின் அடிப்படை என்பதை மறந்து விடல் கூடாது. இத்தகைய நினைவுடன் 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்' என்னும் ஆணையினை நிறைவேற்றும் பணியைத் தொடர்ந்து நடத்தினல், வெகுவிரைவில் தமிழ் இலக்கிய நிலை முழு வெற்றியுடன் திகழ்வதை எட்டுத் திக்கும் எட்டும்படித் தமிழகம் முரசு கொட்டலாம்.

வாழிய தமிழ்மொழி!

வளர்க இலக்கியம்!!

ஓங்குக தமிழர்!!!

Telegrams: "RAMBROS"

N.Ramu Bros,

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

அன்பும் அருளும் மெய்யுணர்வின் முற்றுப்பேறும் உடையவராய்ச் சிவபிரான் திருவடித் தொண்டில் இடையறாது நிற்பாரே மீண்டுவாரா வீட்டுநெறி தலைக்கூடிச் சிவத்தோடு இரண்டறக் கலப்பர்.

'வேளாளர் நாகரிகம்'

மொழிச் சுவை மட்டும் இலக்கியமாகாது. பொருளணி மட்டும் இலக்கியமாகாது. இயற்றுவோர் ஆற்றல் மட்டும் இலக்கியமாகாது. உண்மையான மெல்லிய இனிய நாகரிகச் செவ்வியே இலக்கியத்திற்குப் பேருயல். சான்றோர்களின் சானறாண்மையிலேயே தமிழ் இலக்கியங்கள் எழுந்து அழியாது நிலை பெற்றுள்ளன.

'சங்க இலக்கிய-
-இன்கவித் திரட்டு'

சங்க நூல்கட்கே ஒரு தனிச் சிறப்பு உண்டு. உலக இயற்கையையும் கூர்ந்து ஆழ ஆராய்ந்து, புலப்பட்ட உண்மைகளைப் புலப்பட்டவாறே உள்ளக் கிளர்ச்சியுடன் அக்கிளர்ச்சி தோன்ற வெளியிடுவ தென்பது. இதனுற் பொருளின் இயற்கைகளும் மக்களின் இயற்கைகளும் நமக்கு உள்ளவாறே தெரிந்து விடும். அக் கருத்துக்கள் நம் வாழ்க்கையின் பல துறைகட்குப் பல வகைகளிலும் பயன் படக் கூடும்.

'கலித்தொகைச்—
—சொற்பொழிவுகள்'

அறிஞர்கள் பகுத்தறிவாலும், நடுத்தரமானவர்கள் அனுபவத்தாலும், அறிவிலிகள் அவசியத்தாலும், மிருகங்கள் இயற்கையாலும் அறிவு முதிர்ச்சி பெறுகிறார்கள்.

'சிசரோ'

பண்புரி; பலன் பெறு, மனிதர்களிடம் அன்பு செலுத்தி, தொண்டும் செய்வாயானல், நீ பதுங்கி ஒளிந்தாலும் பலன் பெறுமல் தப்ப முடியாது

'எமர்சன்'

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரு. சூ. என் லாய் கூட்டறிக்கையானது:—

1. ஒவ்வொரு நாடும் மாறுபடாமல் நாட்டின் எல்லையையும் சுதந்திர உரிமையையும் போற்றி நடந்துகொள்ள வேண்டும்.

2. உலக நாடுகள் ஒற்றுமையாக இருந்து போர்-ஆக்கிரமிப்பு முதலியவைகளைக் கைவிடல் வேண்டும்.

3. ஒருநாடு மற்றொரு நாட்டின் உள்நாட்டுக் கொள்கையில் தலையிடுதல் கூடாது.

4. எந்த நாடும் ஏற்றத்தாழ்வு பாராட்டாமல் சமத்துவமாக நல்ல மேன்மை தரும் முறையில் நடந்துகொள்ள வேண்டும்.

5. எந்த நாடும் அமைதியாக வாழ்வதுடன் மற்ற நாடுகளையும் அமைதி குலையாமல் வாழவிட வேண்டும்.

என்ற ஐவகைப் பெருங் கொள்கைகளைக் கொண்டு திகழுகின்றது.

இவ்வறிக்கையின்படி உலக நாடுகள் (வல்லரசுகளும்) எல்லாம் ஆசிய நாடுகளுடன் ஒத்துழைத்தால் ஆ! வருங்கால உலகம் புத்தொளி பெற்று மகிழ்ச்சி நிலவ மிளிரும் என்பதைக் கூறவும் வேண்டுமோ!

வாழ்க கூட்டுறவுப் பண்பு!
வளர்க நாட்டின் அமைதி!!

'தமிழ் வண்டு'

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர், இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம், (அஞ்)